**செய்தி வெளியீடு எண். 83** **நாள்.26.07.2021**

**<u>பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)</u>**

புதிய தொழில் துவங்கி வேலை வாய்ப்பு உருவாக்கவும், ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளில் படித்த வேலையற்ற இளைஞர்களை தொழில் முனைவோராக்கிடவும் **<u>பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்</u>** மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாவட்ட தொழில் மையம் (DIC), கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC) மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் (KVIB) ஆகிய அலுவலகங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் குறுந்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் வேலை வாய்ப்பு உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில், கடந்த ஆண்டுக்கான (2021–22) இலக்கீடு 50 தொழில் முனைவோர்களுக்கு மான்யத் தொகை ரூ.150.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**<u>கடன் பெற தேவையான தகுதிகள்.</u>**

| | |
|---|---|
| வயது | - 18 வயதுக்கு மேல் |
| கல்வித்தகுதி | - உற்பத்தி தொழில் திட்ட மதிப்பீடு 10லட்சத்துக்கு மேலும் சேவைத் தொழில் திட்ட மதிப்பீடு 5 லட்சத்துக்கு மேலும் இருப்பின் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| வருமான வரம்பு | - வருமான வரம்பு இல்லை. |

**<u>அதிகபட்ச கடன் தொகை..</u>**

உற்பத்தி தொடர்பான தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் சேவை தொடர்பான தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சமும், கடன் தொகையாக வழங்கப்படுகிறது.

இதில் திட்ட அறிக்கையில் 10% தொகையினை பொதுப்பிரிவினர் விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சிறுபான்மையினர்/மகளிர்/முன்னாள்இராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள்/திருநங்கைகள் ஆகியோர் 5% விளிம்புத் தொகையாக செலுத்தினால் போதுமானது.

| **மானிய விவரம்** | மானிய விகிதம் திட்ட மதிப்பில் | |
|---|---|---|
| | <u>நகரம்</u> | <u>ஊரகம்</u> |
| பொதுப்பிரிவினர் | 15% | 25% |
| இதர பிரிவினர் | 25% | 35% |

இத்திட்டத்தில் அனைத்து இலாபகரமான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த சுற்றுப்புற சூழலுக்கு நன்மை பயக்கும் தொழில்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. மேலும் COVID-19 காரணமாக நேர்முகத்தேர்வின்றி தகுதியான விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பங்களை www.kviconline.gov.in என்ற இணைய வலைதளம் மூலம் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், மேலும் விவரங்களுக்கு மண்டல இணை இயக்குநர், தொழில் வணிகத் துறை, கிண்டி, சென்னை–32. அவர்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 044 – 22501621 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**